بسم اللہ الرحمن الرحیم نحمدہ ونصلی علی رسولہ الکریم وعلی عبدہ المسیح الموعود
وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَأَنْتُمْ أَذِلَّةٌ

தொகுதி 6 | இதழ் 22

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

வருடாந்திர சந்தா ரூபாய் 575/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

21 ஷவ்வால் 1442 ஹிஜ்ரி கமரி 03 இஹ்ஸான் 400 ஹிஜ்ரி ஷம்ஸி தப்லீக் 03 ஜூன் 2021

## அல்லாஹ்வின் கட்டளை

لَقَدْ كَفَرَ الَّذِيْنَ قَالُوْٓا اِنَّ اللّٰهَ هُوَ الْمَسِيْحُ ابْنُ مَرْيَمَ ؕ قُلْ فَمَنْ يَّمْلِكُ مِنَ اللّٰهِ شَيْـًٔا اِنْ اَرَادَ اَنْ يُّهْلِكَ الْمَسِيْحَ ابْنَ مَرْيَمَ وَاُمَّهٗ وَمَنْ فِى الْاَرْضِ جَمِيْعًا

நிச்சயமாக மர்யமின் மகன் மஸீஹ் தான் அல்லாஹ் எனக் கூறுகிறவர்கள் உறுதியாக நிராகரிப்பவர்களாகி விட்டனர். நீர் (அவர்களிடம்) கூறுவீராக. மர்யமின் மகன் மஸீஹையும், அவருடைய தாயாரையும் பூமியிலுள்ள எல்லாரையும் விட அல்லாஹ் அழித்து விட நாடினால் அவனுக்கு எதிராக ஆற்றல் பெற்றவன் எவன்? (5:16)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**எமது நண்பர்கள் தத்தமது உள்ளங்களில் மார்க்கத்திற்கு தொண்டாற்றுவதற்கு எண்ணம் கொள்ள வேண்டும். எந்த முறையில் மற்றும் வடிவில் தொண்டு செய்ய இயலுமோ அதனை செய்ய வேண்டும். எவர் மார்க்கத்திற்கு தொண்டாற்றுகின்றாரோ மற்றும் மக்களுக்கு பயனளிக்கக் கூடியவராக இருக்கின்றாரோ அவருக்கு இறைவனின் பார்வையில் மதிப்பும் மரியாதையும் உள்ளது**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

### துஆவின் உண்மைத்துவம்

துஆ எனும் கட்டுரை தொடர்பாக மீண்டும் எழுதுவது மிகவும் அவசியம் என தெரிய வருகிறது. முந்தைய கட்டுரைகள் போதுமானதாக நிரூபணமாகவில்லை. துஆ என்பது மிகவும் நுட்பமான விவகாரமாகும். அதற்குரிய நிபந்தனை என்னவென்றால், முஸ்தத்ஈ (துஆவிற்கு விண்ணப்பம் செய்பவரு)க்கும் தாயி (துஆ செய்பவரு)க்கும் இடையில் தொடர்பு உறுதியானதாக இருக்க வேண்டும். எந்த அளவுக்கு என்றால் அவரின் வேதனை இவரின் வேதனையாகவும், அவரின் மகிழ்ச்சி இவரது மகிழ்ச்சியாகவும் ஆகிவிட வேண்டும். எவ்வாறு பால்குடி குழந்தையின் அழுகை தாயின் மார்பிலிருந்து இயற்கையாக பாலை சுரக்கச் செய்து விடுகின்றதோ அதுபோன்று முஸ்தத்ஈ (துஅவிற்கு கூறுபவரின்)யின் கஷ்ட நிலையும், விண்ணப்பமும் தாயி (துஆ செய்பவர்) மீது உருக்கத்தையும், உறுதியையும் ஏற்படுத்தி விட வேண்டும்.

### கவனமும் உருக்கமும் கூட இறைவனிடமிருந்தே அருளப்படுகிறது

அசல் விஷயம் என்னவென்றால் எல்லா விவகாரங்களும் இறைவனால் அருளப்பட்டவையாகும். அவற்றில் உழைப்பின் தலையீடு இல்லை. கவனமும் உருக்கமும் இறைவனிடமிருந்தே இறங்குகின்றன. ஒருவருக்கு வெற்றிக்கான வழி திறக்கப்பட வேண்டுமென்று இறைவன் விரும்பும்போது அது வெளிப்படுகின்றது. ஆயினும் காரணிகளின் தொடர் அவசியமாகும். துஆ செய்பவரை ஏதாவதொரு தூண்டுதல் செயல்படக்கூடியவராக ஆக்க வேண்டும். அதற்குரிய திட்டம் இதைத் தவிர்த்து வேறு எதுவும் இருக்க முடியாது. துஆ செய்பவர் தன் பக்கம் கவனம் செலுத்தும் நிர்பந்தத்திற்கு ஆளாகி விடும் வகையில் துஆவிற்கு கூறுபவர் தனது நிலையை ஆக்கிக் கொள்ள வேண்டும்.

### துஆ மற்றும் மார்க்கத் தொண்டு

எனது கவனத்தை ஈர்க்கின்ற மற்றும் எனது உள்ளத்தில் துஆவிற்கான தூண்டுதலை ஏற்படுத்துகின்ற விஷயம் ஒன்றே ஒன்று தான். அதாவது இன்ன நபர் மார்க்கத்திற்கு தொண்டாற்றக்கூடியவராக இருக்கின்றார் என்றும் அவரது இருப்பு இறைவனுக்கும் இறைத் தூதருக்கும், இறை வேதத்திற்கும், இறை அடியார்களுக்கும் பயனளிக்கக்கூடியதாக இருக்கின்றது என்றும் ஒருவரைக் குறித்து நான் அறியும்போது அதுபோன்ற நபருக்கு ஏற்படும் துன்பமும், வேதனையும் உண்மையில் எனக்கே ஏற்படுகின்றது. எமது தோழர்கள் தத்தமது உள்ளங்களில் மார்க்கத்திற்கு தொண்டாற்ற எண்ணம் கொள்ள வேண்டும். எந்த முறையில் எந்த வடிவில் அவர்களால் தொண்டாற்ற முடியுமோ தொண்டாற்ற வேண்டும். நான் மெய்யாகவே கூறுகின்றேன். எவர் மார்க்கத்திற்கு தொண்டாற்றக் கூடியவராகவும், மக்களுக்கு பயனளிக்கக் கூடியவராகவும் இருக்கின்றாரோ அவருக்கே இறைவனிடத்தில் மதிப்பும் மரியாதையும் உள்ளது. அவ்வாறு இல்லையென்றால் மக்கள், நாய்கள் மற்றும் நரிகளைப் போன்று மரணிப்பதை அவன் எவ்வகையிலும் பொருட்படுத்த மாட்டான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 295, 296 – 2018 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

---

### நபிமொழி

**(முஸ்லிம் அல்லாதவரின் ஜனாஸாவாக இருந்தாலும் ஜனாஸாவிற்கு மரியாதை செலுத்த வேண்டும்)**

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்: எங்களுக்கு அருகில் ஒரு ஜனாஸா கொண்டு செல்லப்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுந்து நின்றார்கள். நாங்களும் எழுந்து நின்று விட்டோம். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! இது ஒரு யூதரின் ஜனாஸாவாகும் என்று நாங்கள் கூறினோம். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் ஜனாஸாவை கண்டால் எழுந்து நின்று விடுங்கள் என்று கூறினார்கள்.

(ஸஹீஹ் புகாரி தொகுதி 2 கிதாபுல் ஜனாயிஸ் – 2006 ஆம் ஆண்டு காதியானில் அச்சிடப்பட்டது)

......☆......☆......☆......

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ரமலானின் கடைசி பத்து நாட்களில் குறிப்பாக நமது இறைவணக்கங்களை மேம்படுத்துவதன் பக்கமும், பாவமன்னிப்பு கோருதல் மற்றும் தவ்பா செய்வதன் பக்கமும், துஆக்கள் செய்வதன் பக்கமும், அல்லாஹ்விற்குரிய இறைவணக்கங்களின் உரிமைகளை வழங்குவதன் பக்கமும், அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குவதன் பக்கமும் நாம் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில் அப்போது தான் நாம் அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியவர்களாக திகழ்ந்து நரகத்திலிருநது தப்பிக்க முடியும். இந்த நபர் அல்லாஹ்வின் தூதர் மீது எல்லாரையும் விட அதிக நேசம் கொண்டவர் என எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹைக் குறித்து வானவர்களும் கூறினார்களோ அவரை நாம் ஏற்றுக் கொண்டவர்கள் ஆவோம். எனவே நமது ஒவ்வொரு செயலும், அசைவும் நமது இந்த வாதத்தை வெளிப்படுத்த வேண்டும்**

**ஸலவாத்தின் உண்மையான ஞானத்தை உலகிற்கு இன்று ஒருவர் வழங்க முடியும் என்றால் அது அஹ்மதிகளாகிய நம்மால் மட்டுமே முடியும்**

**அல்லாஹ்வின் பாவமன்னிப்பிற்கான வாசல்கள் திறந்துள்ளன. ஆயினும் உடல் ஆரோக்கியமான நிலையில் தவ்பா செய்வது அவசியமாகும். அதை தவிர்த்து கடைசி மூச்சின்போது தவ்பா செய்வது உகந்ததல்ல**

ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டண் இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 30ஏப்ரல் 2021** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1400 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **30 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ- الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ- إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ- صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

اَلَّذِيْنَ يُنْفِقُوْنَ أَمْوَالَهُمْ بِاللَّيْلِ وَالنَّهَارِ سِرًّا وَّعَلَانِيَةً فَلَهُمْ أَجْرُهُمْ عِنْدَ رَبِّهِمْ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ

அல்லாஹ்வின் அருளால் இன்றைய நாட்களில் நாம் ரமலான் மாதத்தைக் கடந்து கொண்டிருக்கின்றோம். இன்னும் இரண்டு நாட்களில் கடைசி பத்து நாட்களில் நாம் பங்கு பெற இருக்கின்றோம். ரமலானின் கடைசி பத்து நாட்களில் நரகத்திலிருந்து அல்லாஹ் இரட்சிப்பு வழங்குகின்றான் என்று ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(கன்ஸுல் உம்மால் தொகுதி 8 பக்கம் 463 ஹதீஸ் எண் 23668 – 1985 ஆம் ஆண்டு பைரூத்தில் அச்சிடப்பட்டது)

எனவே நாம் இந்த நாட்களில் குறிப்பாக நமது இறைவணக்கங்களை ஒழுங்குபடுத்துவதன் பக்கமும், பாவ மன்னிப்பு கோருவதன் பக்கமும், தவ்பா செய்வதன் பக்கமும், துஆக்கள் செய்வதன் பக்கமும், அல்லாஹ்விற்குரிய இறைவணக்கத்தின் உரிமைகளை வழங்குவதன் பக்கமும், அடியார்களுக்குரிய உரிமைகளை வழங்குவதன் பக்கமும் மிக அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். ஏனென்றால் அப்போது தான் நாம் அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியவர்களாக திகழ்ந்து நரகத்திலிருந்து தப்பிக்கக்கூடியவர்களாக இருப்போம்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொந்த முன்மாதிரி மற்றும் வழிமுறை ரமலானின் இறுதி பத்து நாட்களில் எவ்வாறு இருந்தது? இறைவணக்கங்களின் தரம் என்னவாக இருந்தது? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறைவணக்கத்தின் தரம் பொதுவான நாட்களில் எப்படி இருந்தது என்றால் அதனை நம்மால் வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது. ஆனால் ரமலானில் அந்நிலை எவ்வாறு இருந்தது என்பது தொடர்பாக ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த அளவுக்கு முயற்சிகள் செய்தார்கள் என்றால் அதனை அந்த நாட்களைத் தவிர்த்து மற்ற நாட்களில் பார்க்க முடியாது.

(சஹீஹுல் புகாரி, கிதாபுல் ஃபஸ்ல் லைலத்துல் கத்ர்....... ஹதீஸ் எண் 2024)

முயற்சிகள் எவ்வாறு இருந்தன? என்பது நமது கற்பனைக்கு அப்பாற்பட்டதாகும் என்பது வெளிப்படையாகும். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களால் கூட அந்த முயற்சிகளை முழுமையாக எடுத்துரைக்க முடியவில்லை. அவ்வாறிருந்தபோதிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுக்கு அழகிய முன்மாதிரி ஆவார்கள். நீங்கள் அன்னாரை பின்பற்ற வேண்டும். மேலும் உங்களது ஆற்றல்களுக்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நிலைநாட்டியுள்ள அந்த உயர்தரமான அந்தஸ்தை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டும் என்று அல்லாஹ் நம்பிக்கையாளர்களுக்கு கட்டளையிட்டுள்ளான். அப்போது தான் அல்லாஹ் நமது துஆக்களை கேட்பான். மேலும் அந்நிலையில்தான் நம்பிக்கையாளர் செல்ல வேண்டிய பாதையில் செல்லக்கூடியவர்களாக நாம் இருப்போம். மேலும் ஒரு நம்பிக்கையாளர் எந்த அந்தஸ்தை அடைவதற்கு முயற்சி செய்ய வேண்டுமோ அந்த அந்தஸ்தை அடைவதில் முன்னேறுபவர்களாக நாம் இருப்போம். எனவே இந்நாட்களில் குறிப்பாக துஆக்களில் நாம் ஈடுபட வேண்டும்.

இன்றைய நாட்களில் அஹ்மதிகள் குறிப்பாக இதன் பக்கம் கவனம் செலுத்துவது அவசியமாகும். சில நாடுகளில் அதிலும் குறிப்பாக பாகிஸ்தானிலும், பொதுவாக இன்னும் சில முஸ்லிம் நாடுகளிலும் ஜமாஅத்திற்கு எதிராக முயற்சிகள் செய்யப்படுகின்றன. நமக்கு எதிராக வெறுப்பின் நெருப்புகள் மூட்டப்படுகின்றன. அல்லது இதுபோன்ற முயற்சிகள் செய்யப்படுகின்றன. இதிலிருந்து அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக. எதிரியின் தீங்கை அல்லாஹ் அவர்கள் பக்கமே திருப்பி விடுவானாக. இன்றைய நாட்களில் தொற்று நோய்

பரவியுள்ளது. இதிலிருந்தும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பாக வைப்பதற்கு அதேபோன்று துஆ செய்ய வேண்டும்.

நமது நற்பாக்கியம் என்னவென்றால், அல்லாஹ் நமக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாகவும், பின்னர் இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைத் தொண்டர் மூலமாகவும் துஆக்களின் பக்கம் கவனமூட்டியுள்ளான். இன்னும் கூறப்போனால், அவர்கள் மூலம் அந்த துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுவதற்கான வழிமுறைகளையும் கற்றுத் தந்துள்ளான். அல்லாஹ்வை புகழ்வதுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதும் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்கு மிகவும் அவசியமாகும். இல்லையென்றால் துஆக்கள் வானம் மற்றும் பூமிக்கு இடையில் நின்று விடுகின்றன.

(ஜாமி திர்மிதி, அப்வாபுல் வித்ர், பாப் மாஜாஅ ஃபி ஃப்ஸ்லுஸ் ஸலாத்.... ஹதீஸ் எண் 486)

எவர் என்மீது ஸலவாத் ஓதுவதை கைவிட்டு விட்டாரோ அவர் சொர்க்கத்திற்குரிய வழியை இழந்து விட்டார் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

(சுனன் இப்னு மாஜா, கிதாப் இகாமத்துஸ் ஸலாத்..... ஹதீஸ் எண் 908)

இதேபோன்று இன்னொரு ஹதீஸும் உள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: என்மீது ஸலவாத் ஓதுங்கள். நீங்கள் ஸலவாத் ஓதுவது உங்களது தூய்மைக்கும், முன்னேற்றத்திற்கும் காரணியாகும்.

(கன்ஸுல் உம்மால், தொகுதி 1 பக்கம் 249..... ஹதீஸ் எண் 2164 – 2004 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறும் கூறியுள்ளார்கள்: அதாவது எவர் உள் அன்புடன் என்மீது ஸலவாத் ஓதுவாரோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை அருள் செய்வான். மேலும் அவருக்கு பத்து படித்தரங்களை உயர்த்துவான். மேலும் அவரது கணக்கில் பத்து நன்மைகளை எழுதுவான்.

(கிதாப் சுனன் குப்ரா, தொகுதி 6 பக்கம் 21,22..... ஹதீஸ் எண் 9892 – 1991 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபில் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எனவே இந்த அறிவிப்புகளிலிருந்து ஸலவாத் ஓதுவதன் முக்கியத்துவம் தெரிய வருகின்றது. நாமே ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டவர்களாக இருக்கின்றோம். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்ககப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்தைப் பற்றிய அறிவைப் பெற்றிருப்பதாகவும், அன்னாரைத் தவிர்த்து அந்த அந்தஸ்தை வேறு எவர் மூலமாகவும் பெற முடியாது என்றும் வாதம் செய்யக்கூடியவர்களாக இருக்கின்றோம். அந்நிலையில் நாம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்வதும், அன்னாரின் மீது அதிக அதிகமாக ஸலவாத் ஓதுவதற்கு முயற்சி செய்வதும் நம்மீது கடமையாகின்றது.

அல்லாஹ் நமது துஆக்களை ஒப்புக் கொள்ள வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல. மாறாக, நிரந்தரமான தூய்மை நமது வாழ்க்கையின் அங்கமாக ஆகிவிட வேண்டும் என்பதற்காகவும் நாம் ஸலவாத் ஓத வேண்டும். மேலும் இந்த ஸலவாத் (ஓதுவதன்) மூலமாக அல்லாஹ்வின் நெருக்கத்தை பெறக்கூடியவர்களாக நாம் ஆகிவிட வேண்டும் என்பதற்காகவும் இந்த ஸலாவத்தின் மூலம் நிரந்தரமாக நமது வாழ்க்கையை தூய்மையாக ஆக்கிக் கொள்ளக்கூடியவர்களாக நாம் ஆகிவிட வேண்டும் என்பதற்காகவும் ஸலவாத் ஓத வேண்டும். மேலும் நாம் ஸலவாத்தின் மூலமாக மார்க்க மற்றும் ஆன்மீக முன்னேற்றங்களை பெறக்கூடியவர்களாக ஆகிவிட வேண்டும். நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரை ஏற்றுக் கொண்டிருக்கின்றோம் என்பது நமது வெறும் வாதமாகவோ அல்லது வெறும் வாய்ப் பேச்சுக்களாகவோ இருந்து விடக்கூடாது. மாறாக, நமது செயல் மற்றும் நமது ஒவ்வொரு அசைவும் நமது இந்த வாதத்தை உண்மைப்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். மேலும் இந்த நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை எல்லாரையும் விட மிக அதிகமாக நேசிக்கக்கூடியவராக இருக்கின்றார் என்று எவரைக் குறித்து வானவர்களும் கூறினார்களோ அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை ஏற்றுக் கொண்டவர்களாக நாங்கள் இருக்கின்றோம் என்பதை நமது செயல்களும் வெளிப்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 4, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 598 அடிக்குறிப்பு எண் 3)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது இந்த இல்ஹாமை தத்கிராவில் குறிப்பிடுகின்றார்கள். அந்த சொற்கள் இவையாகும்:

صَلِّ عَلٰی مُحَمَّدٍ وَّاٰلِ مُحَمَّدٍ سَیِّدِ وُلْدِ اٰدَمَ وَخَاتَمِ النَّبِیّٖنَ

ஆதமின் சந்ததிகளின் தலைவரும், காத்தமுல் அன்பியாவும் ஆகிய முஹம்மது (ஸல்) அவர்கள் மீதும், முஹம்மது (ஸல்) அவர்களின் குடும்பத்தினர் மீதும் நீர் ஸலவாத் ஓதுவீராக.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: அனைத்து அந்தஸ்துகள் மற்றும் அருள்கள் இதன் மூலமாகவே கிடைக்கின்றன. மேலும் பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்வதற்கு இது ஒரு வழிமுறையாகும் என்பதை இந்த விஷயம் சுட்டிக் காட்டுகின்றது. சுப்ஹானல்லாஹ்! பிரபஞ்சத்தின் தலைவர் எத்தனை மகத்தான அந்தஸ்தை பெற்றிருக்கின்றார் அதாவது அவர் எந்த அளவிற்கு நெருக்கத்தைப் பெற்றிருக்கின்றார் என்றால் அவர் மீது அன்பு கொள்ளக்கூடியவர் இறைவனின் அன்பராகி விடுகின்றார். அவரின் தொண்டர் உலகத்தின் தொண்டராக ஆகி விடுகின்றார். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தின் உரிமையை வழங்கக்கூடியவர் அல்லாஹ்விடம் எப்படிப்பட்ட அந்தஸ்தை பெற்று விடுகின்றார் என்றால் ஓர் உலகம் அவரது கரத்தில் ஒன்றுகூடி அடிமைத்துவத்தை அறிவித்து விடுகின்றது.

எனவே இன்று ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானி அவர்களின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் அந்தஸ்து என்பதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தை மேற்கொண்ட காரணத்தினாலேயே ஆகும். பெருமானார் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டதால் ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பராக மாறியதால் கிடைத்ததாகும். இந்த அன்பின் காரணமாகவே அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் தோன்றிய உம்மத்தி நபி என்று கூறியுள்ளான். அன்னார் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பணியை பரப்புவதற்காக அனுப்பப்பட்டுள்ளார்கள். அதனை முன்னெடுத்துச் செல்வதற்காக அனுப்பப்பட்டுள்ளார்கள். இஸ்லாத்தை பரப்புவதற்காக அனுப்பப்பட்டுள்ளார்கள்.

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இந்த இடத்தில் எனக்கு ஒரு விஷயம் நினைவிற்கு வருகின்றது. ஓர் இரவில் இந்த எளியவன் எந்த அளவிற்கு ஸலவாத் ஓதினேன் என்றால் உள்ளமும், உயிரும் அதனால் நறுமணமானது. அந்த இரவில் கனவில் நான் இவ்வாறு கண்டேன். அதாவது இனிமையான, தூய தண்ணீரின் வடிவில் நிறைந்த ஒளியின் கஸ்தூரிகளை வானவர்கள் இந்த எளியவனின் வீட்டிற்கு எடுத்து வருகின்றார்கள். அவர்களில் ஒருவர் இவ்வாறு கூறினார்: நீர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அனுப்பிய ஸலவாத்துகளின் பரக்கத்துகள் இவையே ஆகும்.

அதேபோன்று இன்னொரு விநோதமான சம்பமும் நினைவிற்கு வந்து விட்டது. ஒருமுறை இல்ஹாம் இறங்கியது. அதன் பொருள், விண்ணுலக மக்கள் பகைமை கொண்டுள்ளனர் என்பதாகும். அதாவது இறைவனின் எண்ணம் மார்க்கத்தை உயிரூட்டுவதற்கு பொங்கி எழுந்துள்ளது. ஆனால் விண்ணுலக மக்களுக்கு உயிர்ப்பிக்கும் நபர் வெளிப்படவில்லை. எனவே அவர்கள் கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர்.

இதற்கிடையில் நான் கனவில் கண்டேன். மக்கள் ஓர் உயிரூட்டுபவரை தேடிக் கொண்டு திரிகின்றனர். ஒரு நபர் இந்த எளியவனுக்கு முன்னால் வந்தார். மேலும் சைகை செய்தவாறு هٰذَا رَجُلٌ يُّحِبُّ رَسُوْلَ اللّٰهِ என்று கூறினார். அதாவது இந்த நபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டிருக்கின்றார். இந்த கூற்றின் பொருள் இவ்வாறாகும். அதாவது உயிரூட்டக்கூடிய அல்லது மார்க்கத்தை உயிர்ப்பிக்கக்கூடிய அந்தப் பொறுப்பின் மாபெரும் நிபந்தனை தூதரின் மீதான நேசமாகும். அது இந்த நபரிடத்தில் ஒன்றுகூடியுள்ளது.

(பராஹீனே அஹ்மதிய்யா தொகுதி 4, ரூஹானீ கஸாயின் தொகுதி 1 பக்கம் 597, 598 அடிக்குறிப்பு எண் 3)

எனவே அல்லாஹ் மார்க்கத்தை உயிரூட்டுவதற்காக எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியை அனுப்பி இருக்கின்றானோ அவரை நாம் ஏற்றுக் கொள்பவர்களாக இருக்கின்றோம். இஸ்லாத்தின் மறுமலர்ச்சி என்ற முக்கியத்துவம் வாய்ந்த பணியை அல்லாஹ் அவரிடத்தில் ஒப்படைத்து அனுப்பி இருக்கின்றான். முழு உலகையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடியின்கீழ் கொண்டு வருவதற்கும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தின்கீழ் கொண்டு வருவதற்கும் அல்லாஹ் அன்னாரை அனுப்பியுள்ளான். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அன்பில் மூழ்கி தான் இந்த அந்தஸ்தை பெற்றுள்ளார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரின் ஜமாஅத்தில் நாம் இணைந்தவர்களாக இருக்கின்றோம். உலகத்தை விட மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்குவேன் என்று நாம் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் உடன்படிக்கை செய்கின்றோம். அவ்வாறிருக்க நம்மீது இது கடமை இல்லையா? இன்னும் கூறப்போனால் மாபெரும் கடமையில்லையா? அதாவது அந்த உயிரூட்டுபவரின் பணியை முன்னெடுத்தவாறு நமது வாக்குறுதிகளை முழுமை செய்தவாறு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதியவாறு, அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தியின் உதவியாளராக நாம் ஆக வேண்டும் அல்லவா? மேலும் நாம் உலகிற்கும் இதனை கூற வேண்டும்.

அதாவது நீங்கள் எவரைக் குறித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்துபவர் என்று புரிந்து வைத்துள்ளீர்களோ அவரே எல்லாரையும் விட அதிகமாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நேசிக்கக்கூடியவராக இருக்கின்றார். அன்னார் (அலை) அவர்கள்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து இந்த ஸலவாத்தை ஓதுவதன் சரியான ஞானத்தைப் பெற்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீது ஸலவாத் ஓதக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மைப் பேரன்பரிடமிருந்து ஸலவாத் ஓதுவதன் சரியான ஞானத்தைப் பெற்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அதிகமாக ஸலாவத் ஓதக்கூடியவர்களாக நாங்கள் இருக்கின்றோம் என்று நாம் உலகிற்கு கூற வேண்டும்.

இந்த ரமலானில் நாம் நமது சொந்த துஆக்களின் பக்கம் மட்டும் கவனம் செலுத்தக்கூடியவர்களாக இருப்பதில்லை. மாறாக, நிம்மதியிழந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பெயர் உலகில் மேலோங்க வேண்டும் என்பதற்காக துஆ செய்யக்கூடியவர்களாக நாம் இருக்கின்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கொடி முழு உலகிலும் ஒளி வீசி பறக்க வேண்டும் என்று விரும்புகின்றோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தை உலக மக்கள் மேற்கொண்டு தமது இம்மையையும், மறுமையையும் ஒழுங்குபடுத்தக்கூடியவர்களாக உலக மக்கள் ஆகிவிட வேண்டும் என்று நாம் துஆ செய்கின்றோம். மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் வருவதை தமது பெருமையாக கருத வேண்டும். இஸ்லாத்தின் பெயரோடு இணைந்து கொள்வதை பெருமைக்குரியதாக மக்கள் கருத வேண்டும்.

உலகில் அமைதி மற்றும் சாந்தியின் உத்திரவாதமாக இந்த ஒரே ஒரு மார்க்கம் தான் உள்ளது. இந்த ஒரே ஒரு மார்க்கம் தான் அடியாரை அல்லாஹ்வுடன் இணைப்பதற்கு ஆற்றல் படைத்துள்ளது. இந்த ஒரே ஒரு மார்க்கம் தான் இந்த வாதத்தை செய்கின்றது. அதாவது இன்றும் ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் மீதான நேசத்தின் காரணமாக அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களின் துஆக்களை கேட்கின்றான். அவர்களுக்கு பதிலளிக்கின்றான்.

எனவே அஹ்மதிகளாகிய நமது தோள்களில் இந்த மாபெரும் பொறுப்பு சுமத்தப்பட்டுள்ளது. இதனை உலகிற்கு நாமே எடுத்துக்கூற வேண்டும். எனவே நாம் எந்த அளவிற்கு உண்மையுடனும் ஆழத்துடனும் இந்த கடமையை நிறைவேற்றுகின்றோம். மேலும் அல்லாஹ்வின் அருள் மற்றும் பரிசுகளிலிருந்து எந்த அளவிற்கு பயன் பெறக்கூடியவர்களாக இருக்கின்றோம் என்று நாம் ஆய்வு செய்ய வேண்டும். நாம் உண்மையிலேயே கியாமத் வரை இந்த அருட்கொடைகளுக்கும், அருட்களுக்கும் வாரிசாக வேண்டும் என்றால் பின்னர் நாம் தனிப்பட்ட முறையிலும், ஒட்டுமொத்த அளவிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதிக் கொண்டே செல்ல வேண்டும். நாம் இவ்வாறு செய்து கொண்டே இருந்தால் பின்னர் எதிரியின் சூழ்ச்சி மற்றும் அவனது தாக்குதல் மற்றும் அவனது ஆயுதங்கள் அல்லாஹ்வின் அருளால் அழிந்து நாசமாகுவதை கண்டு கொள்வோம்.

மேலும் அல்லாஹ் எவ்வாறு சுயமே அந்த எதிரிகளை சமாளிக்கின்றான்? என்பதையும் கண்டு கொள்வோம். மேலும் நாமும் நமது சந்ததிகளும் ஆன்மீக ரீதியில் முன்னேற்றத்தின் படித்தரங்களை எவ்வாறு கடந்து செல்கின்றோம் என்பதையும் நாம் கண்டு கொள்வோம். நாம் தனிப்பட்ட முறையில் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்ற அடையாளங்களையும் கண்டு கொள்வோம். ஒட்டுமொத்த ரீதியிலும் துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும்

அடையாளங்களை நாம் கண்டு கொள்வோம். இந்த விஷயம் ஒருபோதும் பொய்யாக முடியாது. ஏனென்றால் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் நமக்கு இந்த விஷயத்திற்கான சாட்சியம் வழங்கியுள்ளார்கள்.

அதாவது அல்லாஹ்வை புகழ்ந்தவாறும், என்மீது ஸலவாத் ஓதியவாறும் நீங்கள் என்ன துஆ செய்வீர்களோ அந்த துஆ உங்களது விருப்பத்தை நிறைவேற்றக்கூடியதாக இருக்கும் என்று அல்லாஹ்வின் தூதர் நமக்கு உத்திரவாதம் அளித்துள்ளார்கள். ஆனால் நிபந்தனை என்னவென்றால், கலப்பற்ற உள்ளத்தால் அந்த ஸலவாத் ஓதப்பட்டிருக்க வேண்டும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்து மற்றும் மேன்மைகள் உயர வேண்டும் என்ற ஒரு துடிப்பு இருக்க வேண்டும். அல்லாஹ்வின் சன்னிதானத்தில் அதற்காக உளமார்ந்த துஆ செய்யப்பட வேண்டும். இந்த விஷயத்தைப் பற்றி நமக்கு ஆளமான மற்றும் நுட்பமான ஞானம் இருக்கும்போதுான் இந்த நிலை ஏற்பட முடியும்.

இது தொடர்பாக நான் சுருக்கமாக கூறி விடுகின்றேன். மனிதன் துஆ செய்து கொண்டிருக்கின்றான் என்ற உணர்வு ஏற்படும்போதுதான் வேதனையுடன் துஆ வெளிப்பட முடியும். வெறும் மேலோட்டமாக சொற்களை கூறி விடுவதால் சொற்களின் ஆழத்தைப் பற்றியும் அதன் பொருளைப் பற்றியும் அறிவு ஏற்பட முடியாது. மேலும் உள்ளத்தின் மீது ஏற்பட வேண்டிய தாக்கமும் ஏற்பட முடியாது. உள்ளத்தில் தாக்கம் ஏற்படவில்லை என்றால் பின்னர் அந்த துஆவில் உணர்வும், உருக்கமும் ஏற்பட முடியாது. எனவே உள்ளத்தின் மீது தாக்கம் ஏற்பட வேண்டுமென்றால் மனிதன், தான் என்ன துஆ செய்கின்றான்? எதற்காக துஆ செய்கின்றான்? என்பது அவனுக்கு தெரிந்திருக்க வேண்டும். லட்சக்கணக்கான, கோடிக்கணக்கான மக்கள் வெறும் நாவினால் ஸலவாத்தின் சொற்களைக் கூறிக் கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் அதன் பொருள் என்ன? ஸலவாத் ஓதுவதால் நமக்கு என்ன பயன்? மேலும் அதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு என்ன பயன்? என்பதை அவர்கள் அறிவதில்லை.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஒரு முறை கூறினார்கள். அதன் சுருக்கத்தை இப்போது நாள் ஓரளவிற்கு எடுத்து வைக்கின்றேன்.

அன்னார் கூறுகின்றார்கள்: ஸலவாத்தில் اَللّٰهُمَّ صَلِّ என்பது முதலிலும், اَللّٰهُمَّ بَارِكْ என்பது பிறகும் வைக்கப்பட்டுள்ளது. இதனுடைய நுட்பமான ஞானம் என்னவென்றால், صلوٰۃ (ஸலாத்) என்பதன் பொருள் துஆ ஆகும். ஆக اَللّٰهُمَّ صَلِّ என்பதன் பொருள் அல்லாஹ்வே! நீ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக துஆ செய்வாயாக என்பதாகும். இங்கு துஆ செய்யக்கூடியவர் இரு வகைப்படுவர். முதல் வகை எவரிடத்தில் எதுவுமே இல்லையோ அவர் பிறரிடத்தில் வேண்டுவார். இரண்டாவது வகை துஆ செய்பவர் என்பவர் யாரென்றால், அவர் சுயம் அதிகாரம் படைத்தவராக இருப்பார். அவர் பிறருக்கு வழங்குவார். நாம் இறைவனைப் பற்றி அவன் துஆ செய்கின்றான் என்று கூறும்போது அதன் பொருள் என்னவென்றால், அவன் தன்னால் படைக்கப்பட்ட பொருட்களான காற்று, தண்ணீர், நிலம், மலை மற்றும் ஏனைய அனைத்து பொருட்களிடமும் நீ எனது அடியானுக்கு உதவி செய்வாயாக என்று கூறுவதாகும்.

எனவே اَللّٰهُمَّ صَلِّ என்பதன் பொருள் இவ்வாறு அமைகின்றது. அதாவது அல்லாஹ்வே! நீ எல்லா நன்மைகளையும் பயன்களையும் உலகம், பூமி மற்றும் வானத்தின் எல்லா நன்மைகளையும் உனது தூதருக்காக விரும்புவாயாக. அவருக்கு கண்ணியத்தையும், மேன்மையையும் வழங்குவாயாக. அவரது கண்ணியத்தையும், மேன்மையையும் அதிகரிப்பாயாக.

அடுத்து பாருங்கள். அல்லாஹ் விரும்பினால் இதை விட அதிகமாக எதுவும் நடக்க முடியாது. அல்லாஹ் என்ன விரும்புகின்றான்? என்பதை நம்மால் அனுமானிக்க முடியாது. எனவே இந்த துஆவானது அல்லாஹ்வின் சன்னிதானத்திலயே முன் வைக்கப்பட்டு விட்டது. அதாவது அவன் அதிகம் அதிகமான அந்தஸ்தை விரும்ப வேண்டும். அல்லது அவன் தான் விரும்புவதை அருள வேண்டும்.

அடுத்து اَللّٰهُمَّ بَارِكْ என்பதன் பொருள் என்னவென்றால், அல்லாஹ்வே! நீ ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது செய்த அருட்களையும், கருணைகளையும், அன்பளிப்புகளையும் மேலும் அதிகரிப்பாயாக. எந்த அளவுக்கென்றால், முழு உலகின் கருணைகளும், பரக்கத்துகளும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒன்றுகூடி விட வேண்டும். முதலில் அல்லாஹ் விரும்புவதை வழங்குவான். அவன் என்ன விரும்புவான் என்பதை நம்மால் அறிந்து கொள்ள முடியாது. பின்னர் அதில் எந்த அளவிற்கு பரக்கத்துகள் வழங்கப்பட வேண்டுமென்றால், அது அதிகரித்துக் கொண்டே செல்ல வேண்டும். அதாவது, அது முற்றிலும் நமது சிந்தனைக்கும், கற்பனைக்கும் அப்பாற்பட்டதாகும்.

எனவே இந்த அனைத்து விஷயங்களும், துஆக்களும் ஒன்றுகூடிவிடும்போதும் அது நிலைபெறுவதற்காக நாம் துஆ செய்யும்போதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்திற்காக செய்த துஆக்களில் நாமும் பங்கு பெறுபவர்களாக இருப்போம். நாம் உள்ளத்தின் வேதனையோடு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மார்க்கத்தின் மேன்மைக்காகவும் முழு உலகிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆளுமைக்காகவும் நாம் துஆ செய்தால் இறைவன் அந்த அனைத்து துஆக்களிலும் நம்மை பங்குதாரராக ஆக்கி தருதின் அருட்களிலிருந்து நம்மை பயன்பெறச் செய்து விடுவான். ஏனென்றால் ஸலவாத்தில் உம்மத்திற்காகவும் துஆ உள்ளது. நாம் என்ன விதையை விதைப்போமோ அதன் கனிகளிலிருந்து நாமும் பயன் பெறக்கூடியவர்களாக இருப்போம். ஏனென்றால் صَلِّ عَلَيْكَ என்பது விதை வடிவில் உள்ளது. بَارِكْ (பாரிக்) என்பது அதன் கனியின் வடிவில் உள்ளது.

(குத்பாத்தே மஹ்மூத் தொகுதி 7 பக்கம் 77,78)

ஆனால் நிபந்தனை என்னவென்றால், கலப்பற்ற உள்ளத்துடனும், கலப்பற்ற எண்ணத்துடனும் இவை அனைத்தும் செய்யப்பட வேண்டும். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களால் கொண்டு வரப்பட்ட போதனையின்படி அமல் செய்யவும் வேண்டும். அல்லாஹ்விற்குரிய உரிமைகளையும், அடியார்களுக்குரிய உரிமைகளையும் வழங்குவதன் பக்கம் கவனம் இருக்க வேண்டும். உண்மையான குடும்பத்தினரின் உரிமையை வழங்கக்கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும். அவ்வாறல்லாமல் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரால் அநீதியிழைப்பவர்களாக இருக்கக்கூடாது.

ஒரு பக்கம் அநீதியிழைத்துக் கொண்டு, மறுபக்கம் ஸலாவத் ஓதுபவர்களுக்கு கிடைக்கக்கூடிய பரக்கத்துகளுக்கு எங்களை வாரிசாக்குவாயாக என்று நாம் கூறக்கூடியவர்களாக இருக்கக்கூடாது. சட்டத்தை மீறி மக்களுக்கு துன்பம் கொடுப்பவர்களாக நாம் இருந்து கொண்டு நாங்கள் தூதரின் நேசர்

ஆவோம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதக்கூடியவர்கள் ஆவோம். எனவே எங்களை எதுவும் கூறுக்கூடாது. சாலைகளை மறிப்போம். நோயாளிகளை மருத்துவமனைக்கு செல்ல அனுமதிக்க மாட்டோம். ஏனென்றால் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரால் இவை அனைத்தையும் நாங்கள் செய்கின்றோம். எனவே நாங்கள் செய்வதே சரியாகும் என்று கூறுபவர்களாக இருக்கக்கூடாது.

அவ்வாறிருந்தால் இந்த அனைத்து விஷயங்களும் அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கட்டளைகளுக்கு முற்றிலும் நேர் எதிரானதாகும். அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் இதுபோன்ற விஷயங்களுக்கு ஒருபோதும் அனுமதி நல்கவில்லை. மேலும் இதுபோன்ற நபர்களின் ஸலவாத்தும் எந்த பயனும் தராது. இதுபோன்ற செயல்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்தஸ்தையும், உயர்வையும் அதிகரிப்பதற்கு பகரமாக அதைக் குறைப்பதற்கான முயற்சிகளாக அமையும். இஸ்லாத்தை இழிவுபடுத்துவதற்கு செய்யப்படும் ஒரு முயற்சியாகும். அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் பெயரால் அநீதியிழைக்கப்படுமானால் பிறகு அல்லாஹ்வின் பிடி கடுமையாக இருக்கும். எப்போதும் இதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

எனவே ஸலவாத்தின் உண்மையான புரிதலை இன்று உலகிற்கு அஹ்மதிகளாகிய நாமே வழங்க முடியும். எனவே இந்த ரமலானில் எங்கு நாம் ஸலவாத்தின் பக்கம் அதிக கவனம் செலுத்துவோமோ அங்கு நாம் நம்மிடத்தில் தூய மாறுதல்களை உருவாக்குவதற்கும் முயற்சி செய்ய வேண்டும். அவை ஸலவாத் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு அவசியம் ஆகும். இவை ஒப்புக் கொள்ளப்பட்டு விட்டால் பின்னர் அவை மனிதனுக்கு பயனளிக்கும். அவரது துஆக்கள் ஒப்புக் கொள்ளப்படும். அவரது ஆன்மீக நிலை சிறந்ததாகி விடும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான அன்பில் உண்மையான முன்னேற்றத்தைக் கண்டு மனிதன் அல்லாஹ்வின் உண்மையான நெருக்கத்தையும் பெற்றுக் கொள்கின்றான். உண்மையான ஸலவாத் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சென்றடைந்து பின்னர் அன்னாரின் உம்மத்தின் முன்னேற்றத்திற்கும் வழிவகை செய்கின்றது.

ஸலவாத்தின் முக்கியத்துவத்தை நாம் இந்த விஷயத்திலிருந்து மேலும் தெரிந்து கொள்ளலாம். அதாவது அல்லாஹ் திருக்குர்ஆனில் நம்பிக்கையாளர்களிடம், நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுங்கள் என்று கூறுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான்:

إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுவதில் எந்த அளவிற்கு முக்கியத்துவம் உள்ளது என்றால் அல்லாஹ் அந்த தூதரின் மீது அருள் செய்கின்றான். அவனது வானவர்களும் அந்த தூதருக்காக அருட்களை வேண்டுகின்றனர். இங்கு அல்லாஹ் துஆ செய்வதன் பொருள் என்ன? என்பது (முன்னர்) விளக்கப்பட்டு விட்டது. அல்லாஹ் எப்பொழுதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படித்தரங்களை உயர்த்திக் கொண்டே செல்கின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகத்துவம் மற்றும் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்கு ஏற்பாடுகளை செய்து கொண்டே செல்கின்றான்.

அல்லாஹ்வின் இந்த கட்டளைகளின்படி உண்மையான பொருளில் அமல் செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதக்கூடிய இந்த பொறுப்பை இக்காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஜமாஅத்தின் மீது அல்லாஹ் சுமத்தியுள்ளான். இதன் மூலம் நீங்கள் இறைவனின் அருட்களுக்கு வாரிசாகி விடுவீர்கள். வானவர்களின் துஆக்களிலிருந்தும் பயன்பெறக்கூடியவர்களாக இருப்பீர்கள். ஏனென்றால் வானவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதும்போது அதன் அருள் ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களின் உண்மையான உம்மத்திற்கும், அன்னாரை ஏற்றுக் கொண்டவர்களுக்கும் கிடைக்கும். இந்த அருள் நமக்கு கிடைக்கும்போது பின்னர் நன்றியுணர்வின் தேட்டம் என்னவென்றால், நாம் முன்னரை விட அதிகமாக ஸலவாத் ஓதக்கூடியவராக ஆகிவிட வேண்டும். இந்த ஸலவாத்தும், நன்றியுணர்வும் எப்படிப்பட்ட முற்றுப் பெறாத தொடர் என்றால் அது உண்மையான நம்பிக்கையாளருக்கு பயனளித்துக் கொண்டே செல்லும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த வசனத்திற்கு ஓரிடத்தில் இவ்வாறு விளக்கமளிக்கின்றார்கள்:

எமது தலைவரும், எஜமானருமாகிய ஹஸ்ரத் முஹம்மத் முஸ்தஃபா (ஸல்) அவர்களின் உண்மையையும், நன்றியுணர்வையும் பாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா வகையான தீய இயக்கங்களையும் எதிர் கொண்டார்கள். வகை வகையான துன்பங்களையும், துக்கங்களையும் சுமந்தார்கள். ஆனால் (அவற்றை) பொருட்படுத்தவில்லை. இந்த உண்மை மற்றும் நன்றியுணர்வின் காரணமாகவே அல்லாஹ் அருள் செய்தான். அதன் காரணமாக அல்லாஹ் இவ்வாறு கூறினான்:

إِنَّ اللَّهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا صَلُّوا عَلَيْهِ وَسَلِّمُوا تَسْلِيمًا

அல்லாஹ் மற்றும் அவனது அனைத்து வானவர்களும் தூதர் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் அனுப்புகின்றனர். நம்பிக்கையாளர்களே! நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது ஸலவாத் ஓதுங்கள். இந்த வசனத்திலிருந்து வெளிப்படுவது என்னவென்றால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல்கள் இவ்வாறு இருந்தன. அதாவது அன்னாரை புகழ்வதற்கு அல்லது நற்பண்புகளை எடுத்துரைப்பதற்கு வேறு எந்த சொற்களையும் குறிப்பாக குறிப்பிடவில்லை. சொற்கள் கிடைத்திருக்கும். ஆனால் சுயம் அதை பயன்படுத்தவில்லை. இதுபோன்ற வசனங்கள் வேறு எந்தவொரு நபியின் கண்ணியத்திற்காகவும் பயன்படுத்தப்படவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆன்மாவில் உண்மையும், நன்றியுணர்வும் இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் செயல்கள் இறைவனின் பார்வையில் எந்த அளவுக்கு விருப்பத்திற்குரியவையாக இருந்தனவென்றால், இனி வரும் மக்கள் நன்றி செலுத்தும் விதமாக ஸலவாத் ஓதட்டும் என்று அல்லாஹ் நிரந்தரமாக கட்டளை வழங்கி விட்டான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 37, 38)

எனவே இந்த நன்றியுணர்வு கடைசியில் நமக்கே நன்மை சேர்ப்பவையாக இருக்கின்றது. இந்த ரமலானிலும் அதற்குப் பிறகும் நிரந்தரமாக ஸலவாத்தின் முக்கியத்துவத்தை புரிந்தவாறு ஸலவாத்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H.Muhammed Lebbai
(Sec.Taleem, Melapalayam)

ஓதும் நற்பாக்கியத்தை அல்லாஹ் நமக்கு வழங்கிக் கொண்டே செல்வானாக.

اَللّٰھُمَّ صَلِّ عَلٰی مُحَمَّدٍ وَعَلٰی اٰلِ مُحَمَّدٍ کَمَا صَلَّیْتَ عَلٰی اِبْرَاھِیْمَ وَعَلٰی اٰلِ اِبْرَاھِیْمَ اِنَّکَ حَمِیْدٌ مَّجِیْدٌ۔ اَللّٰھُمَّ بَارِکْ عَلٰی مُحَمَّدٍ وَّعَلٰی اٰلِ مُحَمَّدٍ کَمَا بَارَکْتَ عَلٰی اِبْرَاھِیْمَ وَعَلٰی اٰلِ اِبْرَاھِیْمَ اِنَّکَ حَمِیْدٌ مَّجِیْدٌ

நாம் கவனமூட்ட விரும்புகின்ற இரண்டாவது விஷயம் இஸ்திக்ஃபார் ஆகும்.

اَسْتَغْفِرُ اللّٰہَ رَبِّیْ مِنْ کُلِّ ذَنْبٍ وَّاَتُوْبُ اِلَیْہِ என்பது துஆ ஆகும். அதாவது நான் அனைத்து பாவங்களிலிருந்தும் அல்லாஹ்விடத்தில் பாவமன்னிப்பு வேண்டுகின்றேன். எனது இறைவனின் பக்கம் நான் தவ்பா செய்தவாறு குனிகின்றேன். இது எப்படிப்பட்ட ஒரு துஆ என்றால் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: இஸ்திக்ஃபார் என்பதன் அசல் மற்றும் உண்மையான பொருள் இதுவாகும். அதாவது மனிதனின் எந்தவொரு பலவீனமும் வெளிப்படாமல் இருக்க வேண்டும் என்றும் இறைவன் தனது ஆற்றலால் உதவ வேண்டும் என்றும் தனது உதவி மற்றும் ஒத்தாசையின் வட்டத்தில் மனிதனை எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் இறைவனிடத்தில் விண்ணப்பிப்பது இஸ்திக்ஃபார் ஆகும். இந்த சொல் غَفَرَ (கஃபர) என்பதிலிருந்து வெளிப்பட்டுள்ளது. ஒன்றை மூடுவதற்கு غَفَرَ (கஃபர) என்று கூறப்படும். எனவே இதனுடைய பொருள் என்னவென்றால், இறைவன் தனது ஆற்றலால் பாவமன்னிப்பு வேண்டுபவரின் இயல்பிலுள்ள பலவீனத்தை மறைக்க வேண்டும் என்பதாகும். ஆனால் பொது மக்களுக்காக இந்த சொல் மேலும் பரந்துபட்ட பொருளைக் கொண்டுள்ளது. அதாவது ஏற்கனவே செய்யப்பட்ட பாவங்களை இறைவன் மூடி மறைக்க வேண்டும் என்றும் பொருள்படும்.

ஆனால் அசல் மற்றும் உண்மையான பொருள் என்னவென்றால், பாவமன்னிப்பு வேண்டுபவருக்கு இறைவன் தனது இறைமையின் ஆற்றலால் அவனது இயல்பிலுள்ள பலவீனங்களிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதாகும். மேலும் தனது ஆற்றலால் அவனுக்கு ஆற்றல் வழங்க வேண்டும் என்பதும், மேலும் தனது ஞானத்தால் அவனுக்கு அறிவு வழங்க வேண்டும் என்பதும், மேலும் தனது ஒளியால் அவனுக்கு ஒளி வழங்க வேண்டும் என்பதும் இஸ்திக்ஃபார் என்பதன் பொருள் ஆகும். ஏனென்றால் இறைவன் மனிதனை படைத்து விட்டு அவனிடத்திருந்து தனித்து விடவில்லை. மாறாக, அவன் எவ்வாறு மனிதனின் படைப்பாளனாக இருக்கின்றானோ அவனது அனைத்து உள்ளார்ந்த மற்றும் வெளிப்பு ஆற்றல்களை படைத்தவனாக இருக்கின்றானோ அதேபோன்று அவன் மனிதனை நிலைபெறச் செய்யக்கூடியவனாகவும் இருக்கின்றான். அவன் கய்யூமாக இருக்கின்றான். அதாவது அவன் எவற்றையெல்லாம் படைத்துள்ளானோ அவற்றை சிறப்பான தனது உதவியால் பாதுகாக்கக்கூடியவனாக இருக்கின்றான். நிலைபெறச் செய்யக்கூடியவனாக இருக்கின்றான்.

அன்னார் கூறினார்கள்: இறைவனின் பெயர் கய்யூம் ஆகும். அதாவது தனது உதவியால் படைப்பினங்களை நிலைபெறச் செய்யக்கூடியவன் ஆவான். எனவே மனிதனின் கடமை என்னவென்றால், அவன் இறைவனால் படைக்கப்பட்டிருப்பதைப் போன்று அவன் தனது பிறப்பின் வடிவத்தை சீர்கெடுவதிலிருந்து இறைவனின் கய்யூமிய்யத் மூலமாக பாதுகாக்க வேண்டும். எனவே இது மனிதனுக்கு ஓர் இயற்கையான அவசியமான விஷயமாக இருந்தது. அதற்காகவே இஸ்திக்ஃபார் செய்யும்படி வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது.

இறைவன் இதன் பக்கம் சுட்டிக் காட்டியவாறு திருக்குர்ஆனில் اَللّٰہُ لَاۤ اِلٰہَ اِلَّا ھُوَ الْحَیُّ الْقَیُّوْمُ என்று கூறுகின்றான். அதாவது அந்த இறைவன் படைத்தவனாக இருக்கின்றான். அவன் கய்யூமாகவும் இருக்கின்றான். மனிதன் பிறந்து விட்ட பிறகு அவனது படைப்பின் பணி முழுமையாகி விட்டதென்றாலும் கய்யூமிய்யத் என்ற பணி எப்போதும் எஞ்சியிருக்கின்றது. எனவே இஸ்திக்ஃபார் செய்வதன் தேவை ஏற்பட்டுள்ளது. தனது நிலைகள் சீர்கெடுவதிலிருந்து பாதுகாப்பதற்காக நிரந்தரமாக இஸ்திக்ஃபார் செய்வதன் தேவை ஏற்பட்டுள்ளது. இறைவனின் கய்யூமிய்யத் என்ற பண்பு நிரந்தரமாக இஸ்திக்ஃபார் செய்கின்றபோது செயல்படுகின்றது.

சுருக்கமாக இறைவனின் ஒவ்வொரு பண்பிற்கும் ஒரு சிறப்பு உள்ளது. எனவே இஸ்திக்ஃபார் என்பது கய்யூமிய்யத் என்ற பண்பிலிருந்து பயன் பெற்றுக் கொண்டிருப்பதற்காக ஆகும். இது சூரா ஃபாத்திஹாவின் اِیَّاکَ نَعْبُدُ وَاِیَّاکَ نَسْتَعِیْنُ என்ற வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அதாவது நாங்கள் உன்னையே வணங்குகின்றோம். உனது கய்யூமிய்யத், ருபூபிய்யத் எங்களுக்கு பயனளிக்க வேண்டும் என்றும் எங்களை தடுமாற்றத்திலிருந்து பாதுகாக்க வேண்டும் என்றும் நாங்கள் உன்னிடமே உதவியும் வேண்டுகின்றோம். அவ்வாறில்லையென்றால் பலவீனங்கள் வெளிப்பட்டு நாங்கள் இறைவணக்கம் செய்ய முடியாமல் ஆகிவிடும்.

(அஸ்மதே அன்பியா, ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 671, 672)

எனவே இறைவணக்கங்களை செய்வதற்கும், ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்கும் அல்லாஹ்வின் கட்டளைகளின்படி அமல் செய்வதற்கும் இஸ்திக்ஃபார் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் அவசியமான ஒரு விஷயமாகும். ஏதாவதொரு பாவம் வெளிப்பட்டு விட்டால் மட்டுமே இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும் என்பதல்ல. நிச்சயமாக அப்போதும் இஸ்திக்ஃபார் மற்றும் தவ்பா செய்வது மிகவும் அவசியமாகும். ஆனால் கடந்த கால பாவங்களுக்கான மன்னிப்பும், எதிர்காலத்தில் பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கும் அல்லாஹ்வின் உதவி அவசியமாகும். அது இஸ்திக்ஃபார் மூலமாகவே கிடைக்கின்றது.

எனவே பாவம் செய்யப்பட்டாலும், செய்யாவிட்டாலும் இரண்டு நிலைகளிலும் இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்பு கோருதல்) தீவிர

### திருக்குர்ஆனிலிருந்து...

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய் தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A.Basheer Ahmad
(Naib Sec.Maal, Melapalayam)

O.A. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230

O.A.N. DOORS & STEELS



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
(opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஷய்த்தான் நமது வழிகளில் நிற்கின்றான். மனிதன் தனது முயற்சிகளால் அவனிடமிருந்து தப்பிக்க முடியாது. நான் எனது முயற்சியால் அவனிடமிருந்து தப்பித்து விடுவேன் என்று மனிதன் கூறி விடலாம். ஆனால் அது சாத்தியமல்ல. அல்லாஹ்விடம் உதவி தேடுவது மட்டும்தான் அதற்குரிய ஒரே ஒரு வழியாகும்.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் எனது உதவியை வேண்டுகின்றீர்கள் என்றால் பின்னர் நீங்கள் அதிகமாக இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்பு கோருதல்) செய்யுங்கள். இந்த வழிமுறைதான் எதிர்காலத்தில் ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து உங்களை பாதுகாக்கும். மேலும் கடந்த கால பாவங்களுக்குரிய மன்னிப்பையும் பெற்றுத் தரும் வழிவகையாக அமையும். மனிதன் பலவீனமானவன் ஆவான். எனவே இஸ்திக்ஃபார் மிகவும் அவசியமாகும். ஏனென்றால் இஸ்திக்ஃபார் (பாவமன்னிப்பு கோருவது) ஆற்றல் வழங்குகின்றது. மனித பலவீனங்களிலிருந்து தப்பிப்பதற்கும், ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்கும் இஸ்திக்ஃபார் ஆற்றல் வழங்குகின்றது.

எனவே தொடர்ந்து இஸ்திக்ஃபார் செய்வது அல்லாஹ்வின் பண்பாகிய கய்யூமிய்யத் என்ற பண்பை செயல்பட வைக்கும். இஸ்திக்ஃபார் செய்யக்கூடியவர் எல்லா தீமைகளிலிருந்தும் பாதுகாக்கப்படுவார். தன் பக்கம் வருகின்றவர்களை அல்லாஹ் தன்னுடன் அணைத்துக் கொள்ளக்கூடியவன் ஆவான். எவர் பாவங்களுக்குப் பிறகு தவ்பா செய்தவாறு அவன் பக்கம் வருகின்றாரோ அல்லாஹ் அவருடைய தவ்பாவையும் ஒப்புக் கொள்கின்றான். மேலும் எவர் பாவங்களிலிருந்து தப்பிப்பதற்கும், ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்கும் அவன் பக்கம் ஓடி வருகின்றாரோ அவரது இஸ்திக்ஃபாரையும் (பாவமன்னிப்பு கோருதலையும்) ஒப்புக் கொள்கின்றான். அவரை ஷய்த்தானின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கின்றான்.

அல்லாஹ்வின் கருணை எந்த அளவுக்கு பரந்துபட்டதாக இருக்கின்றது என்பது பற்றி அல்லாஹ் சுயமே இவ்வாறு கூறியுள்ளான்: அது எல்லாவற்றின் மீதும் மேலோங்கி இருக்கின்றது. இது பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஒரு நபரின் சம்பவத்தை எடுத்துரைத்தவாறு கூறுகின்றார்கள்: அந்த நபர் 99 கொலை செய்து விடுகின்றார். கடைசியில் வெட்கம் ஏற்பட்டது. தவ்பா செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்தது. இறுதியில் அவர் ஒரு அறிஞரிடம் சென்றார். அவரிடத்தில் தவ்பா பற்றி கேட்டார். இவ்வளவு பாவம் மற்றும் இத்தனை கொலைகளை செய்த நீ எப்படி மன்னிக்கப்பட முடியும் என்று அவர் கூறினார். அவர் அந்த அறிஞரையும் கொலை செய்து விடுகின்றார். இவ்வாறு 100 கொலைகள் செய்து விடுகிறார்.

அதன் பிறகு அவரிடம் மீண்டும் வெட்க உணர்வு ஏற்பட்டது. 100 கொலை செய்த பிறகு நான் என்ன செய்து விட்டேன் என்று அவருக்கு வெட்கம் ஏற்பட்டது. பின்னர் ஒரு பெரும் அறிஞரிடம் அவர் சென்றார். அவரிடம் பேசினார். அல்லாஹ்வின் வாசல் எப்பொழுதும் திறந்திருக்கிறது என்று அல்லாஹ் கூறுவதாக அந்த அறிஞர் கூறினார். நீ உண்மையிலேயே தவ்பா செய்ய விரும்புகின்றாய் என்றால் பின்னர் இன்ன பகுதிக்கு சென்று விடு என்று அவர் கூறினார். அங்கு மக்கள் அல்லாஹ்வை வணங்குவதில் மூழ்கி இருக்கின்றனர். மார்க்க பணிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். நீ அவர்களுடன் இணைந்து கொள். ஆனால் நினைவிற் கொள். பின்னர் அந்த பகுதியிலிருந்து உனது பகுதிக்கு திரும்பி வந்து விடாதே என்று கூறினார். உண்மையான தவ்பா என்பது இதுவே ஆகும். அதாவது பாவத்தின் மூலமாக ஏற்பட்டுக் கொண்டிருந்த பழைய தொடர்புகள் அனைத்தையும் முறித்துக் கொள்ள வேண்டும். மீண்டும் இந்த பகுதிக்கு திரும்பி வந்து விடக்கூடாது. இதுவே உண்மையான தவ்பா ஆகும்.

எனவே அவர் அந்த பகுதிக்கு செல்லத் தொடங்கினார். தற்போது பாதி வழியைத்தான் கடந்திருந்தார். அதற்குள் மரணம் வந்து விட்டது. அவர் மரணித்து விட்டபோது கருணை மற்றும் தண்டனையின் வானவர்கள் வந்து விட்டனர். இவரை நாங்கள் தான் எங்களுடன் எடுத்துச் செல்வோம் என்று அவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டனர். இவர் தவ்பா செய்து விட்டார். எனவே இவர் சொர்க்கத்திற்கு செல்வார் என்று கருணையின் வானவர் கூறிக் கொண்டிருந்தார். இவர் வாழ்க்கையில் எந்த நன்மையும் செய்யவில்லை. நன்மையின் எந்த பணியும் செய்யவில்லை. இவர் எவ்வாறு சொர்க்கத்திற்கு செல்ல முடியும்? இவர் மன்னிக்கப்பட மாட்டார் என்று தண்டனைக்கான வானவர் கூறினார்.

இதற்கிடையில் மற்றொரு வானவர் வந்தார். இவ்வாறு ஒரு வழி பிறந்தது. அதாவது அவர் நடுவராக இருந்து இவ்வாறு ஒரு தீர்ப்பை வழங்கினார். அதாவது இவர் எந்த பகுதியிலிருந்து வந்து கொண்டிருந்தாரோ மேலும் எந்த பகுதியை நோக்கி சென்று கொண்டிருந்தாரோ அதன் தூரங்களை அளவிடுங்கள். இதில் எந்தப் பகுதிக்கு அருகில் அவர் இருந்தாரோ அவரை அங்கேயே கொண்டு செல்லுங்கள் என்று தீர்ப்பளித்தார். அவர்கள் தூரத்தை அளவிட்டபோது பாவத்திலிருந்து தவ்பா செய்வதற்கும் நன்மையான பணிகளை செய்வதற்கும் எந்த பகுதியை நோக்கி அவர் சென்று கொண்டிருந்தாரோ அந்த பகுதி மிக அருகில் இருந்தது. எனவே கருணையின் வானவர்கள் அவரை சொர்க்கத்திற்கு கொண்டு சென்று விட்டனர்.

(சஹீஹ் முஸ்லிம், கிதாபுத் தவ்பா........ ஹதீஸ் எண் 7008)

ஆக இவை தான் அல்லாஹ்வின் பாவமன்னிப்பிற்குரிய வழியாகும். மிகவும் கொடிய, கொலைகாரனான ஒரு மனிதன் ஆரோக்கியமான நிலையில் தவ்பா செய்தபோது இறைவன் அவனது மன்னிப்பிற்கான ஏற்பாட்டைச் செய்து விட்டான். அல்லாஹ் எந்த அளவிற்கு மன்னிக்கக்கூடியவனாக இருக்கின்றான்? என்று இன்றைய நாட்களில் ஏராளமான பிள்ளைகளும், இளைஞர்களும் கேள்வி கேட்கின்றனர். அவை இந்த ஹதீஸிலிருந்து நமக்கு தெளிவாகின்றது. அதாவது நான் தவ்பாவை ஒப்புக் கொள்கின்றேன். எனது கருணை மிகவும் பரந்துபட்டதாகும். அதற்கு எந்த எல்லையும் இல்லை என்று இறைவன் கூறியிருக்கின்றான். ஆனால் நிபந்தனை என்னவென்றால், மனிதன் உண்மையிலேயே தவ்பா செய்யக்கூடியவனாக இருக்க வேண்டும்.

ஓர் அறிவிப்பில் வருகின்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! அல்லாஹ் தனது அடியாரின் தவ்பாவால் எந்த அளவிற்கு மகிழ்ச்சியடைகின்றான் என்றால் காட்டில் தொலைந்து போன தனது ஒட்டகம் மீண்டும் கிடைத்து விடுவதால் மகிழ்ச்சியடையும் மனிதனை

திருக்குர்ஆனிலிருந்து...

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A.Nasir Ahmad (Ameer, Melapalayam)

திருக்குர்ஆனிலிருந்து...

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A.Shamsul Alam (Qaid, Melapalayam)

விட அல்லாஹ் அதிகமாக மகிழ்ச்சி அடைகிறான்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் தஃவாத்....... ஹதீஸ் எண் 6309)

அல்லாஹ் தன்னை நோக்கி முன்னேறுபவர்களின் பக்கம் அவனும் முன்னேறுகின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இறைவன் கூறுகின்றான்: ஒருவர் என்னை நோக்கி ஒரு முழம் எனக்கு அருகில் வந்தால் நான் அவரை நோக்கி இரண்டு மடங்கு அருகில் செல்கின்றேன். நான் இரண்டு முழம் அளவிற்கு அருகில் செல்கின்றேன். ஒருவர் என்னை நோக்கி நடந்து வந்தால் அவரை நோக்கி நான் ஓடிச் செல்கின்றேன்.

(சஹீஹுல் புகாரி, கிதாபுத் தவ்ஹீது..... ஹதீஸ் எண் 7405)

எனவே நாம் நம்மை பாவங்களிலிருந்து பாதுகாப்பதற்காகவும், நமது பாவங்களிலிருந்து மன்னிப்பை பெறுவதற்காகவும் அல்லாஹ்வை நோக்கி முன்னேறுவதும், நரகத்திலிருந்து தப்பிப்பதும் நமது பணியாகும். ரமலானின் இந்த மாதத்தை அல்லாஹ் குறிப்பாக இந்த பணிக்காக நமக்கு வழங்கியுள்ளான். இதிலிருந்து பயன் பெற்றுக் கொள்ளுங்கள்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தவ்பா மற்றும் பாவமன்னிப்பு ஆகியவற்றை விளக்கியவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்: நினைவிற் கொள்ளுங்கள். தவ்பா மற்றும் பாவ மன்னிப்பு வேண்டுவதை மறுப்பது என்பது உண்மையான மனித முன்னேற்றத்திற்குரிய கதவுகளை அடைத்துக் கொள்வதாகும். ஏனென்றால் இந்த விஷயம் எல்லாரும் நன்கு அறிந்த ஒன்றாகும். மனிதன் தனது இருப்பால் முழுமையானவன் அல்ல. மாறாக அவன் முழுமையடைவதற்கு தேவையுடையவனாக இருக்கின்றான். அவன் பௌதீக நிலையில் பிறந்து படிப்படியாக தனது அறிவை பெருக்கிக் கொள்கின்றான். அவன் தொடக்கம் முதலே அறிஞனாக பிறப்பதில்லை. அவன் பிறந்த பிறகு சுய சிந்தனையை அடைகின்றான்.

பின்னர் அவனது ஒழுக்க நிலைகள் சீர்கெட்டு இருக்கின்றன. ஒரு சிறு வயது பிள்ளையின் நிலையை சீர்தூக்கிப் பார்த்தால் இந்த விஷயம் தெரிய வரும். அதாவது பெரும்பாலான பிள்ளைகள் இந்த விஷயத்தில் பேராசை கொண்டவையாக இருக்கின்றன. அதாவது சிறிய சிறிய சண்டையின் நேரத்தில் மற்ற பிள்ளைகளை அடித்து விடுகின்றன. அவர்களில் பெரும்பாலானவர்கள் பொய் பேசுவதற்கும் மற்ற பிள்ளைகளை ஏசுகின்ற பண்புகளிலும் உறுதிவாய்ந்தவையாக ஆகிவிடுகின்றன.

மேலும் சில பிள்ளைகளுக்கு திருடு, கோள்மூட்டுதல், பொறாமை, கருமித்தனம் போன்ற பழக்கங்கள் இருக்கின்றன. அதன் பிறகு இளமைப்பருவம் அவர்களிடம் பொங்கி எழும்போது அவர்கள் நஃப்ஸே அம்மாரா (தீமையின் பக்கம் சாய்க்கும் ஆன்மா) மீது சவாரி செய்கின்றனர். பெரும்பாலும் அவர்களிடம் பொருத்தமற்ற, தகுதியற்ற செயல்கள் வெளிப்படுகின்றன. அவை மிகத் தெளிவான தீமையாக அமைகின்றன.

சுருக்கம் என்னவென்றால், பெரும்பாலான மனிதர்கள் ஆரம்ப கட்டத்திலேயே அசுத்தமான வாழ்க்கையை கொண்டிருக்கின்றனர். மேலும் நற்பாக்கியம் பெற்ற மனிதன் நடுத்தர வயதில் அந்த தீய எண்ணத்திலிருந்து வெளியே வந்து விடுகின்றார். பின்னர் அவர் தனது இறைவனின் பக்கம் கவனம் செலுத்துகின்றார். உண்மையான தவ்பா செய்து அசுத்தமான விஷயங்களிலிருந்து விலகி விடுகின்றார். தனது இயல்பை தூய்மைப்படுத்துவதற்கான கவலையில் ஆழ்ந்து விடுகின்றார். பொதுவாக இதுவே மனித வாழ்க்கையின் வரலாறாக உள்ளது. மனிதனுக்கு இந்த காலகட்டங்களை கடக்க நேரிடுகின்றது. எனவே தவ்பா ஒப்புக் கொள்ளப்படுவதில்லை என்றால் எவருக்கும் இரட்சிப்பு வழங்குவது இறைவனின் எண்ணம் இல்லை என்பது உண்மையாக அமைந்து விடும். இதுவே இதிலிருந்து வெளிப்படுகின்றது.

(செஷ்மா மஃரூஃபத், ரூஹானி கஸாயின் தொகுதி 23 பக்கம் 192, 193)

அல்லாஹ் இவ்வாறு எண்ணம் கொள்வதற்கு சாத்தியமில்லை. ஏனென்றால் நான் இரட்சிப்பு வழங்குவதற்கு விரும்புகின்றேன் என்று அல்லாஹ்வே கூறுகின்றான்.

அடுத்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

அரபி அகராதியில் தவ்பா என்பதற்கு மனம் திரும்புதலுக்கு கூறப்படும். இதன் காரணமாகவே திருக்குர்ஆனில் இறைவனின் பெயரும் தவ்வாப் என வந்துள்ளது. அதாவது மிகுந்த கவனம் செலுத்தக்கூடியவன். அதன் பொருள் என்னவென்றால், மனிதன் பாவங்களிலிருந்து விலகி உண்மையான உள்ளத்துடன் அல்லாஹ்வின் பக்கம் மனம் திரும்புகின்றபோது இறைவன் மனிதனை விட அதிகமாக அவன் பக்கம் கவனம் செலுத்துகின்றான். இந்த விஷயம் முற்றிலும் இயற்கை சட்டத்திற்கு ஏற்புடையதாகும். ஏனென்றால் இறைவன் மனிதனின் இயல்பில் இந்த விஷயத்தை வைத்திருக்கின்றான்.

அதாவது ஒரு மனிதன் உண்மையான உள்ளத்துடன் மற்றொரு மனிதனின் பக்கம் திரும்புகின்றபோது அந்த மனிதனின் உள்ளமும் அவனுக்காக மென்மையாகி விடுகின்றது. அவ்வாறிருக்க அடியார் உண்மையான உள்ளத்துடன் இறைவனின் பக்கம் திரும்புகின்றபோது இறைவன் அடியாரின் பக்கம் கவனம் செலுத்த மாட்டான் என்ற விஷயத்தை அறிவு எவ்வாறு ஒப்புக் கொள்ள முடியும்? இரு மனிதர்கள் தங்களுக்குள் இவ்வாறு அமல் செய்கின்றனர். அது மனித இயல்பாகும். ஆனால் அல்லாஹ்வை பற்றி அவன் கவனம் செலுத்த மாட்டான். மனிதன் அவன் பக்கம் திரும்பினாலும் இறைவன் அவன் பக்கம் திரும்ப மாட்டான் என்று இறைவனைப் பற்றி கூறுவது சரியல்ல.

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: ஆனால் இறைவன் அவன் பக்கம் திரும்ப மாட்டான். இன்னும் கூறப்போனால் இறைவனின் இருப்பு மிகவும் கண்ணியம் வாய்ந்ததாகவும், கருணையானதாகவும் அமைந்துள்ளது. அவன் மனிதனை விட அதிகமாக கவனம் செலுத்துகிறான். எனவே தான் திருக்குர்ஆனில் இறைவனின் ஒரு பெயர் தவ்வாப் என வந்துள்ளது. அதாவது மிகுந்த கவனம் செலுத்தக்கூடியவன். எனவே மனிதனின் மனம் திரும்புதல் என்பது வெட்கம் மற்றும் பணிவுடன் அமைகின்றது. இறைவனின் கவனம் செலுத்துதல் என்பது கருணை மற்றும் பாவமன்னிப்புடன் அமைகின்றது. கருணை என்பது இறைவனின் பண்புகளில் ஒன்றாக இல்லையென்றால் பின்னர் எந்த மனிதரும் ஈடேற்றம் பெற முடியாது.

வேதனை என்னவென்றால், அந்த மக்கள் இறைவனின் பண்புகளை சிந்தித்துப் பார்க்கவில்லை. செயல்கள் மீதே அனைத்து அடிப்படைகளையும் கொண்டுள்ளனர். ஆனால் அந்த இறைவனோ எந்த செயல்களின்றியும் ஆயிரக்கணக்கான அருட்களை மனிதனுக்கு பூமியில் படைத்திருக்கின்றான். மனிதன் பலவீனமானவனாக இருக்கின்றபோது அவன் தனது கவனக்குறைவிலிருந்து விலகி இறைவன் பக்கம் திரும்பும்போது அதுவும் ஒரு வகையில் தன்னிடத்தில் மரணத்தை ஏற்படுத்திக் கொண்டு தனது முந்தைய அசுத்தமான ஆடையை தனது உடலிலிருந்து கழற்றி விட்டு இறை நேசம் எனும் நெருப்பில் தன்னை

எரித்துக் கொண்டு இறைவன் பக்கம் வரும்போது இறைவன் அந்த நபரின் பக்கம் கருணையுடன் கவனம் செலுத்தாமல் இருப்பானா? இது இறைவனின் பண்பாக இருக்க முடியுமா? இது இறைவனின் வல்லமையின் சட்டமாக இருக்குமா?

(செஷ்மா மஃரூஃபத், ரூஹானீ கஸாயின் தொகுதி 23 பக்கம் 133, 134)

அடுத்து அன்னார் கூறுகின்றார்கள்: இறைவனின் கருணை மற்றும் அருளின் வாசல் ஒருபோதும் அடைக்கப்படுவதில்லை. மனிதன் உண்மையான உள்ளத்துடன் கலப்பற்றத் தன்மையுடன் மனம் திரும்பினால் பின்னர் மிகவும் மன்னிக்கக்கூடியவனாகவும், மீண்டும் மீண்டும் கருணை காட்டக்கூடியவனாகவும், தவ்பாவை ஒப்புக் கொள்ளக்கூடியவனாகவும் இறைவன் இருக்கின்றான். எந்தெந்த பாவம் செய்வதவர்களை எல்லாம் இறைவன் மன்னிப்பான் என்று எண்ணுவது இறை சன்னிதானத்தில் மிகவும் அவமரியாதையான செயலாகும். அவனது கருணையின் கருவூலம் பரந்துபட்டதும் எல்லையற்றதும் ஆகும். அவனிடத்தில் எந்த குறைவும் இல்லை. அவனது கதவு எவருக்கும் அடைக்கப்படுவதில்லை. இவ்வளவு படித்த மக்களுக்கு எங்கிருந்து வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற ஆங்கிலேயர்களின் வேலைவாய்ப்பு நிலைமைகளைப் போன்று நிலைமை இல்லை.

இறைவனிடத்தில் எந்த அளவிற்கு ஒருவர் சென்றடைவாரோ அவர்கள் அனைவருக்கும் அனைத்து உயர்தரமான படித்தரங்களையும் பெறுவார்கள். இது உறுதியான வாக்குறுதியாகும். எவர் இறைவனிடமிருந்து நிராசையடைந்து தனது மரணத் தருணத்தில் கவனமற்ற நிலையில் அவனிடத்தில் செல்வாரோ அத்தகைய மனிதன் மிகவும் துர்பாக்கியம் படைத்த மனிதன் ஆவான். இறைவனிடத்தில் நிராசையடைந்து மரணத் தருவாயில் கவனமற்ற நிலையில் அவனிடம் செல்லும்போது நிச்சயமாக அந்த நேரம் கதவு அடைபட்டு விடும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 296, 297)

எனவே அல்லாஹ்வின் பாவமன்னிப்பிற்குரிய வாசல்கள் திறந்துள்ளன. ஆயினும் மனிதன் ஆரோக்கியமான நிலையில் தவ்பா செய்ய வேண்டுமேயொழிய கடைசி மூச்சில் தவ்பா செய்யக்கூடாது. இது அவசியமாகும். எனவே இந்த நாட்களில் நாம் அதிகம் அதிகமாக தவ்பா மற்றும் இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். இந்த ரமலான் மாதம் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதற்குரிய மாதமாகும்.

பின்னர் இதன் கடைசி பத்து நாட்கள் நரகத்திலிருந்து பாதுகாக்கக்கூடியதாகும். பாவங்களிலிருந்து மன்னிப்பை வேண்டுவதற்கும், நன்மைகள் செய்வதற்கும் நற்பாக்கியம் இறைவனிடமிருந்தே கிடைக்கின்றன. அவனுடன் நாம் ஒன்றிணைந்து கொண்டால் அதாவது அல்லாஹ்வுடன் நாம் ஒன்றிணைந்து கொண்டால் நமது உலகமும், மறுமையும் சீராகி விடும். மேம்பட்டு விடும்.

நான் கூறியதுபோன்று அஹ்மதிகளாகிய நமக்கு சில இடங்களில் பூமி மிகவும் சுருக்கப்படுகிறது. அதாவது தொல்லைகள் தரப்படுகின்றன. இந்த கஷ்டங்களிலிருந்து வெளியேறுவதற்கு ஒரேயொரு தீர்வு தான் உள்ளது. அது என்னவென்றால், நாம் நமது தொடர்பை அல்லாஹ்வுடன் இணைத்துக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வுடன் நமது தொடர்பு ஏற்பட்டு விட வேண்டும். நமது ஸலவாத்தும் நமது இஸ்திக்ஃபாரும் அல்லாஹ்வின் திருப்தியை பெறக்கூடியதாக இருந்து விட்டால் பின்னர் எதிரிகள் ஆயிரம் முயற்சிகள் செய்தாலும் நமக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியாது. ஆனால் இறைவன் நம்மீது திருப்தி கொள்ளாவிட்டால் உலகின் எந்தவொரு ஆயுதமும் நமக்கு பயனளிக்க முடியாது. பிறரின் எந்தவொரு முயற்சியும் நமக்கு பயனளிக்க முடியாது. எனவே இறைவனுடன் நாம் இந்த தொடர்பை உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும். ரமலானில் எதிரிகளின் தீங்குகளிலிந்து தப்பிப்பதற்கும் அதிகமாக துஆ செய்யுங்கள். நான் கூறியதுபோன்று சில இடங்களில் அஹ்மதிகள் மீது மிகவும் அதிகமான கஷ்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. ஏராளமான தொல்லைகளால் அஹ்மதிகள் பீடிக்கப்பட்டுள்ளார்கள். அல்லாஹ் அவர்களுக்கு எளிமையை உருவாக்குவானாக. அவர்களை எதிரிகளின் தீங்குகளிலிருந்து பாதுகாப்பானாக. குறிப்பாக பாகிஸ்தானிய அஹ்மதிகளும் இந்த நாட்களில் தமக்காகவும் ஜமாஅத்தின் அடிப்படையிலும் மிக அதிகமாக துஆ செய்யுங்கள். பின்னர் இந்த நாட்களில் இதேபோன்று கொரானா என்ற தொற்று நோய் பரவியுள்ளது. அதிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பதற்கு அதிகமாக துஆ செய்யுங்கள். அல்லாஹ் இந்த சோதனைகளிலிந்தும் உலகத்திற்கு இரட்சிப்பை வழங்குவானாக. நம்மையும் பாதுகாப்பாக வைப்பானாக. அல்லாஹ் உண்மையான வடிவில் ஸலவாத் மற்றும் இஸ்திக்ஃபார் செய்யக்கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக.

(தமிழில்: மவ்லவி A.அப்துர் ரஹ்மான் தாஹிர்)

---

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துஆ நிகழ்த்திய அற்புதம்

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மக்களுக்கு வறட்சியின் துன்பம் ஏற்பட்டது. இதற்கிடையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஜுமுஆ நாளன்று குத்பா வழங்கிக் கொண்டிருந்தார்கள். ஒரு கிராமவாசி எழுந்து நின்றார். மேலும் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! விலங்குகள் மரணித்து விட்டன. மனைவி மக்கள் பட்டினியாக உள்ளனர். தாங்கள் அல்லாஹ்விடத்தில் எங்களுக்காக துஆ செய்யுங்கள் என்று வேண்டினார். எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரு கரங்களையும் உயர்த்தினார்கள். அப்போது வானத்தில் மேகத்தின் சிறு துண்டு கூட எங்களுக்கு தென்பட்டிருக்கவில்லை. எவனது கையில் எனது உயிர் உள்ளதோ அந்த இறைவனின் மீது ஆணையாக! ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தனது கரத்தை கீழே தாழ்த்தி கூட இருக்கவில்லை. அதற்குள் மேகங்கள் மலைகள் போல ஒன்றுகூடி விட்டன. மேலும் மழையின் துளிகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தாடியை நனைப்பதை நான் கண்டிராத வரை அன்னார் மேடையை விட்டு கீழே இறங்கவில்லை. சுருக்கமாக, அன்று நாள் முழுவதும் மழை பெய்து கொண்டே இருந்தது. மறுநாளும், அதற்கு அடுத்த நாளும், அதற்கு அடுத்த நாளும், எந்த அளவுக்கு என்றால் அடுத்த ஜுமுஆ நாள் வரை (மழை பெய்து கொண்டே இருந்தது.)

அறிவிப்பாளர் கூறுகின்றார்: பின்னர் அதே நபர் அல்லது வேறொரு நபர் எழுந்தார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! கட்டடங்கள் இடிந்து விட்டன. விலங்குகள் மூழ்கி விட்டன. தாங்கள் எங்களுக்காக அல்லாஹ்விடத்தில் துஆ செய்யுங்கள் என்று வேண்டினார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது கரங்களை உயர்த்தி, அல்லாஹ்வே! எங்களின் சுற்று வட்டாரத்திற்கு (செல்லட்டும்); எங்களுக்கு வேண்டாம் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வானத்தின் எந்த திசையை நோக்கி சைகை செய்தாலும் அந்தப் பகுதி வெடித்தது. மேலும் மதீனா குளம் போன்று ஆகிவிட்டது. கனாத் என்ற ஓடை மாதம் முழுவதும் நிறைந்து ஓடிக் கொண்டிருந்தது. எந்தத் திசையிலிருந்து எவர் வந்தாலும் மழையைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்.

(புகாரி தொகுதி 2 பாடம் அல் ஜுமுஆ, 2006 ஆம் ஆண்டு காதியான் பதிப்பு)

## ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்ய) அவர்களின் ஆஸ்திரேலியா சுற்றுப் பயணம் (செப்டம்பர் 2013)

**6 அக்டோபர் 2013**

**தனி நபர் மற்றும் குடும்பங்களுடன் சந்திப்பு**

நிகழ்ச்சிக்கேற்ப 6.30 மணியளவில் ஹுஸூர் (அய்ய) அவர்கள் தனது இருப்பிடத்திலிருந்து அலுவலகத்திற்கு வருகை தந்தார்கள். குடும்ப சந்திப்புகளுக்கு முன்னர் பள்ளிவாசலின் வெளி வளாகத்தில் Ahmadiyya Mecical association australia மற்றும் Ahmadiyya engineers and association australia வின் உறுப்பினர்கள் இரண்டு தனித்தனி குழுக்களாக ஹுஸூர் அன்வர் அவர்களுடன் நிழற்படம் எடுத்துக் கொள்ளும் நற்பாக்கியம் பெற்றனர். அதன் பிறகு குடும்பங்களுடனான சந்திப்பின் நிகழ்ச்சி ஆரம்பமானது.

இன்று மாலை நடந்த இந்த அமர்வில் ஒட்டுமொத்தமாக 46 குடும்பங்களும், 161 தனி நபர்களும் தமது அன்பிற்குரிய எஜமானரை சந்திக்கும் நற்பேறு பெற்றார்கள். ஆஸ்திரேலியாவின் கேம்பேராஸ் Black Town, Marshdon Park, Sydney, Mountruit, Victoria ஆகிய ஜமாஅத்துகளிலிருந்து வருகை தந்த ஜமாஅத் உறுப்பினர்களும் குடும்பங்களும் ஹுஸூர் அவர்களை சந்தித்தனர். அதுமட்டுமின்றி இந்தோனேஷியாவிலிருந்து வருகை தந்திருந்த 6 சகோதரர்களும் தனது அன்பிற்குரிய எஜமானரை சந்திக்கும் நற்பேறு பெற்றார்கள். சந்திக்கக்கூடிய இந்த அனைத்து நபர்களும் தமது அன்பிற்குரிய ஹுஸூர் அவர்களுடன் நிழற்படம் எடுத்துக் கொள்ளும் நற்பேறு பெற்றார்கள்.

கல்வி பயின்று வரும் மாணவர்கள் மற்றும் மாணவிகளுக்கு ஹுஸூர் அவர்கள் பேனா வழங்கினார்கள். சிறிய வயது குழந்தைகள் தமது அன்பிற்குரிய எஜமானரிடமிருந்து சாக்லேட் பெற்றுக் கொண்டார்கள். சந்திப்பிற்கான இந்த நிகழ்ச்சி 8.15 மணி வரை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதன் பிறகு ஹுஸூர் அவர்கள் மஸ்ஜிது பைத்துல் ஹுதாவிற்கு வருகை தந்து மக்ரிப் மற்றும் இஷா தொழுகையை ஜமு செய்து தொழ வைத்தார்கள். தொழுகையை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அவர்கள் தமது தங்குமிடத்திற்கு சென்று விட்டார்கள்.

**ஹுஸூர் (அய்ய) அவர்களின் நேர்காணல்**

ஆஸ்திரேலியாவின் தேசிய வானொலி ABC மற்றும் தேசிய தொலைக்காட்சியின் பிரதிநிதிகள் அக்டோபர் மாதம் 4ந் தேதி 2013 ஆம் ஆண்டு ஜுமுஆ நாளன்று மஸ்ஜித் பைத்துல் ஹுதாவிற்கு வருகை தந்து ஹுஸூர் அவர்களுடன் நேர்காணல் எடுத்தார்கள். அந்த நேர்காணல் இன்று ABC Radio வில் ஒலிபரப்பானது. இந்த தேசிய ரேடியோ ஆஸ்திரேலியாவில் மட்டுமல்ல. மாறாக, Asian Pesific முழுவதும் ஒலிபரப்பப்படுகின்றது. ABC Radio வில் ஹுஸூர் (அய்ய) அவர்களின் நேர்காணல் தொடர்பாக செய்தியும் ஒலிபரப்பப்பட்டது. அதில் ஹுஸூர் அவர்களின் நேர்காணல் தொடர்பாக பல்வேறு Clips களும் ஒலிபரப்பப்பட்டன.

"அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் பாகிஸ்தானில் நடைபெறும் அநீதிகள் தொடர்பாக அச்சத்தை வெளிப்படுத்தினார்" என்ற தலைப்பில் இந்த செய்தி ABC Radio வின் Website லும் பதியப்பட்டுள்ளது.

செய்தியாளர் செய்தியை ஒலிபரப்பியவாறு இவ்வாறு கூறினார்: அஹ்மதி முஸ்லிம்களுக்கு தமது தலைவரை சந்திப்பதென்பது, ஓர் அசாதாரண மற்றும் சிறப்பான சந்தர்ப்பமாகும். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கலீஃபா கடந்த 6 ஆண்டுகளில் முதல் முறையாக ஆஸ்திரேலியாவில் இந்த சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ளார். ஒருவர் மற்றொருவருடன் இணைந்திருக்கின்ற இந்த ஜமாஅத்தின் 5000 உறுப்பினர்கள் ஆஸ்திரேலியாவில் உள்ளனர். அதே நேரம் முழு உலகிலும் எங்களின் எண்ணிக்கை பல மில்லின்கள் ஆகும் என்று இந்த ஜமாஅத் வாதிடுகின்றது. அதைக் கணக்கிடுவது கடினமாகும். வாரத்தின் இறுதியில் Sydney க்கு மேற்குப் பகுதியில் அமைந்துள்ள பள்ளிவாசலில் சுற்றுப் பயணம் செய்தவாறு மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள் இவ்வாறு எச்சரிக்கை செய்தார்கள்: "சிரியாவில் நடைபெறும் இந்த சண்டையில் வல்லரசுகளும் பங்கு பெற்று விட்டால் பின்னர் இந்தப் போர் கட்டுப்பாட்டை இழந்து விடும்".

செய்திகளுக்கிடையில் ஹுஸூர் (அய்ய) அவர்களின் இந்த நேர்காணலிருந்து கீழ்க்கண்ட Clip ஒலிபரப்பப்பட்டது. அதில் ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "சமீபத்தில் 3, 4 வாரங்களுக்கு முன்பு நான் ஒரு குத்பா கொடுத்தேன். அந்த குத்பா 7, 8 அல்லது அதற்கும் மேலான மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. குத்பாவில் நான் மிகவும் தெளிவாக கூறியிருந்தேன். அதாவது சிரியாவின் நிலைமையில் இரு தரப்பினரும் அதாவது அரசாங்கமும், பொது மக்களும் இருவரும் பொறுப்புணர்வை வெளிப்படுத்த வேண்டும். அவர்கள் ஏற்கனவே தமது நாட்டின் அமைதியை சீரழித்து விட்டனர். இன்னும் தனது நாட்டை சீரழித்து வருகின்றனர். இதுமட்டுமல்ல இன்னும் கூறப்போனால் இந்த அழிவு முழு பகுதியிலும் பரவி விடும். மூன்றாம் உலகப் போருக்கு காரணமாக அமையக்கூடிய அழிவாக இந்த அழிவு முழு உலகிலும் பரவி விடக்கூடும் என்று நான் அஞ்சுகிறேன்."

இதன் பிறகு செய்தியாளர் கூறினார்: அஹ்மதிய்யா ஜமாஅத் ஒரு நீண்ட காலமாக தீவிரவாதத்தை கண்டித்து வருகின்றது. இந்த ஜமாஅத்தை பொறுத்தவரை இஸ்லாம் அமைதியை விரும்பும் மார்க்கமாகும். உலக அளவில் ஒன்றுகூடி பணி செய்யப்பட்டால் சிரியா மற்றும் ஏனைய பகுதிகளில் தீவிரவாதத்திற்கு முடிவு கட்ட முடியும் என்று மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள் கூறினார்கள்.

அதன் பிறகு ஹுஸூர் அவர்களின் நேர்காணலின் ஒரு பகுதி ஒலிபரப்பப்பட்டது. அதில் ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"தீவிரவாதம் எப்போதும் இருந்து வந்துள்ளது. ஆயினும் அவர்களின் பெரும்பான்மை அதனை ஆதரிக்கவில்லை. ஆயினும் இங்கு எழுகின்ற கேள்வி என்னவென்றால், இவர்களின் எந்தவொரு அமைப்பிடமோ அல்லது அந்த நாடுகளிடமோ ஆயுதங்கள் அல்லது குண்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலை இல்லை. அவ்வாறிருக்க இவர்கள் ஆயுதங்களை எங்கே இருந்து பெற்று வருகின்றனர்? இவர்கள் மேற்கத்திய நாடுகளிடமிருந்து பெறுகின்றனர் என்பது தெளிவாகின்றது. ஒன்று, கிழக்கு ஐரோப்பாவின் மூலமாக பெறுகின்றனர். இவர்கள் மறைமுகமாக இந்த கொடுக்கல் வாங்கலை செய்கின்றனர். எனக்கு அது பற்றி தெரியாது. வல்லரசுகள் இந்தத் தீவிரவாதத்தை கட்டுப்படுத்த விரும்பினால் கட்டுப்படுத்த முடியும். தீவிரவாதிகளிடம் எண்ணையின் பணம் இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். எந்த நாடுகளிடம் எண்ணையின் பணம் இருக்கின்றதோ அல்லது எவர்கள் ஓரளவிற்கு செல்வதர்களாக இருக்கின்றார்களோ அத்தகைய மக்களே அவர்களுக்கு உதவி செய்கின்றனர். இதன் காரணமாகவே இதுபோன்ற தீவிரவாதிகள் தீய நோக்கங்களை முழுமை செய்து கொள்கின்னர்."

பின்னர் செய்தியாளர் இவ்வாறு கூறினார்: ஆயினும் ஆன்மீக தலைவரின் அசல் கவனம் தமது ஜமாஅத்தின் மீதே உள்ளது. இந்த அமைப்பைச் சார்ந்தவர்களின் அசல் தொடர்பு பாகிஸ்தானுடன்

EDITOR
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
SUB EDITOR
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516
Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 6 Thursday 03 June 2021 Issue No. 22

MANAGER
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.575/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

உள்ளது. அங்குள்ள அஹ்மதிகள் மீது நடைபெறும் அநீதிகளைக் குறித்து பெரும்பாலானவர்கள் கவலை கொண்டுள்ளனர்.

இதன் பிறகு செய்தியில் ஹுஸூர் அவர்களுடன் நடைபெற்ற நேர்காணலின் ஒரு பகுதி ஒலிபரப்பட்டது. அதில் ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்:

“2010 ஆம் ஆண்டில் எங்களது இரண்டு பள்ளிவாசல்களில் சுமார் 90 நபர்கள் ஷஹீதானார்கள். நூற்றுக்கணக்கான மக்கள் காயமுற்றார்கள். இதுமட்டுமின்றி அவ்வப்போது இன்னும் கூறப்போனால் ஒவ்வொரு இரண்டாவது வாரத்திலும் ஏதாவதொரு அஹ்மதியின் ஷஹாதத் செய்தி எனக்கு கிடைக்கின்றது. ஆக இந்த அநீதிகளின் தொடர் நீண்டு கொண்டு செல்கின்றது. பாகிஸ்தானின் கருப்பு சட்டம் அகற்றப்படாத வரை இந்த அநீதி முடிவுக்கு வர முடியாது.”

இதற்குப் பிறகு செய்தியாளர் இவ்வாறு கூறினார்: இந்தோனேஷியாவிலும் முஸ்லிம் முல்லாக்கள் தீவிரவாதத்தால் எமது ஜமாஅத்தின் மீது தொடர்ந்து தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றனர். சில குறிப்பிட்ட பகுதிகளில் அதாவது எங்கு எங்களுக்கு எதிராக நிர்வாகம் உள்ளதோ அங்கு எங்களுக்கு சிக்கல்கள் உருவாக்கப்படுகின்றன. அங்குள்ள மவ்லவிகள் ஆவேசமாக இருக்கின்றனர். அவர்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் மிகக் கடுமையான கூச்சல் குழப்பத்தை உருவாக்குகின்றனர். அதன் காரணமாக சில காலத்திற்கு முன்பு எங்களது மூன்று அஹ்மதிகள் கடுமையாக தாக்கப்பட்டு ஷஹீதாக்கப்பட்டனர் என்றும் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள் கூறினார்கள்.

செய்தியாளர் கூறினார்: மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள் பாகிஸ்தானிலிருந்து நாட்டை துறந்து வந்து லண்டனில் வசித்து வருகின்றார்கள். ஆஸ்திரேலியா சுற்றுப் பயணத்திற்குப் பிறகு லண்டன் திரும்புவதற்கு முன்பு நியூசிலாந்து மற்றும் ஜப்பான் நாட்டிற்கும் செல்வார்கள். தேசிய வானொலி மூலமாக பல லட்சம் மக்கள் வரை ஜமாஅத்தின் தூதுச் செய்தி சென்றடைந்துள்ளது.

### 2013 ஆம் ஆண்டு அக்டோபர் 7 ஆம் தேதி

ஹுஸூர் அவர்கள் காலை 5.15 மணிக்கு மஸ்ஜித் பைத்துல் ஹுதாவிற்கு வருகை தந்து ஃபஜ்ர் தொழுகையை நடத்தினார்கள். தொழுகைக்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் தமது இருப்பிடத்திற்கு திரும்பிச் சென்று விட்டார்கள். காலையில் ஹுஸூர் அவர்கள் அலுவலக தபால் மற்றும் கடிதங்களையும், அறிக்கைகளையும் படித்தார்கள். பின்னர் உரிய வழிகாட்டலையும் வழங்கினார்கள்.

**வக்ஃபே நவ் குழந்தைகளுக்கான வகுப்பு ஹுஸூர் அவர்களுடன்**

நிகழ்ச்சி நிரலுக்கேற்ப 11 மணியளவில் ஹுஸூர் அவர்கள் மஸ்ஜித் பைத்துல் ஹுதாவிற்கு வருகை தந்தார்கள். வக்ஃபே நவ் பிள்ளைகளுக்கான வகுப்பு ஹுஸூர் அவர்களுடன் ஆரம்பமானது. திருக்குர்ஆன் திலாவத் மூலம் வகுப்பு ஆரம்பமானது. அன்பிற்குரிய ஃபர்ஹாத் அஹ்மத் மோனஸ் என்பவர் திருக்குர்ஆன் ஓதினார். அதன் உருது மொழியாக்கத்தை அன்பிற்குரிய ருஷ்த்கார் அஹ்மத் வாசித்துக் காட்டினார். இதன் பிறகு அன்பிற்குரிய ஜீஷான் அஹ்மத் ஆரிஃப் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கீழ்க்கண்ட நபிமொழியை வாசித்துக் காட்டினார்.

“أَكْرِمُوْا أَوْلَادَكُمْ وَ أَحْسِنُوْا أَدَبَهُمْ”

பொருள்: உங்களது பிள்ளைகளுக்கு கண்ணியம் வழங்குங்கள்.

**கேள்வி – பதில் நிகழ்ச்சி**

இதன் பிறகு ஹுஸூர் (அய்ய) அவர்களின் அனுமதியுடன் வாக்கிஃபே நவ் பிள்ளைகளும், குழந்தைகளும் கேள்விகள் கேட்டனர். அல்லாஹ் Drugs (போதைப் பொருட்களை) ஹராமாக்கியுள்ளான். அவ்வாறிருக்க சிகரெட் – புகைப்பிடிப்பதை ஏன் ஹராமாக்கவில்லை? என்று ஒரு வாக்கிஃபே நவ் சிறுவன் கேள்வி கேட்டான்.

இதற்கு பதிலளித்தவாறு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: மது ஹராமாகும். திருக்குர்ஆனில் அது ஹராம் என்ற குறிப்பு உள்ளது. அது ஏன் ஹராம் என்றால் அதன் பாதிப்பு அதிகம். பயன் குறைவாகும். மனிதன் போதையின் நிலையில் இருக்கின்றபோது அவன் சுயநினைவுடன் இருப்பதில்லை. தற்போது மது ஹராமாக்கப்படாத நிலையில் ஒரு சஹாபி போதையின் நிலையில் இருந்தார். ஒரு விஷயத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு தகாத முறையில் பதிலளித்தார். எனவே போதையின் நிலையில் மனிதனிடம் விரும்பத்தகாத செயல்கள் வெளிப்பட்டு விடுகின்றன. எனவே அல்லாஹ் அதனை ஹராமாக்கி விட்டான். ஆனால் சிகரெட் மற்றும் தம்பாக்கு ஆகியவற்றை பொறுத்தவரை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அது தொடர்பாக இவ்வாறு கூறினார்கள்:

நான் இவற்றை ஹராம் என்று கூற மாட்டேன். ஆயினும் இவை தீய விஷயங்களாகும். நான் அதனை வெறுக்கின்றேன். இவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் இருந்திருந்தால் நிச்சயமாக அன்னார் (ஸல்) அவர்கள் இதனை ஹராமாக்கி இருப்பார்கள்.

ஹுஸூர் (அய்ய) அவர்கள் கூறினார்கள்: ஒரு முறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பயணத்தில் சென்றிருந்தார்கள். அன்னார் தங்கியிருந்த இடத்தில் மக்கள் ஹுக்கா குடித்து வந்தனர். (புகை பிடித்து வந்தனர்). ஹுக்காவின் காரணமாக அங்கு தீ பிடித்து விட்டது. அப்போது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் அதனை வெறுத்தவாறு இவை வீணானவையாகும் மற்றும் தீய விஷயங்களாகும் என்று கூறினார்கள். இதைக்கேட்ட அன்னாரின் சஹாபிகள் அதாவது ஹுக்கா குடித்து வந்த சஹாபிகள் தங்களிடமிருந்த ஹுக்காவை உடைத்து விட்டனர். எனவே ஒவ்வொரு போதைப் பொருளும் தீய விஷயமாகும். ஆனால் சிகரெட், தம்பாக்கு போன்றவற்றின் போதை மதுவின் போதையைப் போன்று இருப்பதில்லை. ஆம்! தம்பாக்கு பயன்படுத்துவதன் மூலம் மக்கள் தங்களைத் தாங்களே நோயாளியாக ஆக்கிக் கொள்கின்றனர். புதிதாக நடைபெற்ற ஆராய்ச்சியிலிருந்து நமக்கு இவ்வாறு தெரிய வந்துள்ளது. அதாவது தம்பாக்கு பயன்படுத்துவதன் மூலம் நுரையீரல் புற்றுநோய் ஏற்படுகின்றது.

(தொடரும்....)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad